## வருமானத்துக்கு ஏற்ப நெறிப்படுத்திய RGI வாடகைத் தொகையில் தாக்கம் ஏற்படுத்தும் மாற்றங்கள்

**இனிவரும் 2021 ஜுலை 1ஆம் திகதி தொடக்கம்  RGI முறையிலான வாடகைத் தொகைக்குரிய தகைமையை பெறுவதற்கு, உங்கள் வீட்டுக் குடியிருப்பாளர்களில் ஒவ்வொரு அங்கத்தவரும் ஒரு வருமானவரி விபர அறிக்கையை (Income Tax Return) தாக்கல் செய்ய வேண்டும்.**

**இவ்வருடம் 2021 ஜுலை 1ஆம் திகதி தொடக்கம்,  RGI முறையிலான வாடகைத் தொகை கணிப்பீட்டில் உள்ளடங்க ஏற்கப்படும் வருமானத்தைப் பெறும் குடியிருப்பு அங்கத்தவர்கள் யாவரும் ஒவ்வொரு வருடமும் கட்டாயமாகப் பின்வருவனவற்றை நிறைவேற்ற வேண்டும்:**

**1. வருமானவரி விபர அறிக்கையை தாக்கல் செய்தல்; அத்துடன்**

**2. வருடாந்தம் நடைபெறும் வருமானம் மற்றும் சொத்துக்கான மீளாய்வின் பொழுது தங்களுக்கு வீட்டுவசதி வழங்குபவரிடம் தமது வருமானவரி மதிப்பீட்டு அறிவித்தலை  (Notice of Assessment) சமர்ப்பித்தல்**

இங்குள்ள வீட்டுவசதிச் சேவைகள் சட்டம், *2011*(*Housing Services Act,  2011*) தொடர்பிலான தேவைப்பாடுகளை ஒன்ராறியோ மாகாண அரசு சமீபத்தில் மாற்றி அமைத்துள்ளது. இதன் விளைவாக RGI முறையிலான வாடகைத் தொகைக்குரிய தகைமையைப் பெறுவதற்கு நீங்கள் ஒரு வருமானவரி விபர அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும்.

உங்களுடைய வருமானவரி விபர அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, பின் உறுதி செய்யப்படுவதைத் தொடர்ந்து, கனடா இறைவரி முகவர் அமைப்பு உங்களுக்கு அனுப்பி வைக்கும் ஆவணம் வருமானவரி மதிப்பீட்டு அறிவித்தல் எனப்படும்.

**இலவசமான வருமானவரி விளக்க நிகழ்வுகள் பற்றிய தகவலினைப் பெறுவதற்கு, இங்கு சென்று பாருங்கள்:**

https://www.canada.ca/en/revenueagency/services/tax/individuals/community-volunteer-income-tax-program/need-a-handcomplete-your-tax-return.html#whatfree

**பெரும்பாலான கனடியர்களின் விடயத்தில் 2020ஆம் ஆண்டுக்கான வருமானவரி விபர அறிக்கையை பதிவு செய்யும் இறுதி நாள் 2021 ஏப்பிரல் 30ஆம் திகதி ஆகும்.**